கடன் பெறுவதற்கோ மின் இணைப்புப் பெறுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத காரணத்தினால் அந்த மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கானது 20 ஆண்டுகளாக வழக்கு மன்றத்திலே உள்ள காரணத்தால் இந்த வழக்கைத் துரிதப்படுத்தி முடிப்பதோடு மட்டுமல்லாமல், முடிந்தால் இதற்காக ஒரு தனிச்சட்டம் பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு அவசரச் சட்டம் நிறைவேற்றத் தேவையில்லை. டெல்லியில் இருக்கிற தமிழ்நாடு அட்வகேட் ஆன் ரிக்கார்டு அவர்களிடத்திலே சொல்லி இதைத் துரிதப்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணப்படி அங்கேயிருக்கிற ஏழை எளிய பொதுமக்களுக்கு வருகிற நன்மை காலதாமதப்படுத்தப்படுகிறது, தடையேற்படுகிறது என்று சொன்ன காரணத்தால் இதை விரைவுபடுத்துவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *305* மற்றும் *306* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் *307*, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

307–

பெரணமல்லூர் ஒன்றியம், தாடி–நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***21979** திரு. ஆ.கு. சீனிவாசன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பெரணமல்லூர் ஒன்றியம், *2000* மக்கள் தொகையுள்ள தாடி-நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தாடி–நொளம்பை கிராமத்திற்குச் செல்லும் சாலை மிகக்குறுகிய சாலையாக இருப்பதால், பேருந்து இயக்க முடியாமல் உள்ளது.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலையை விரிவுபடுத்தியும் அகலப்படுத்தியும் பஸ் விட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று பதில் கூறி இருக்கிறார்கள். அதே சமயத்தில், 'தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலம் ஆள்பவர்க்கு,' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, இந்த மூன்று தன்மைகள் படைத்த அம்மா அவர்களின் நல்லாட்சியில் துரித நடவடிக்கை மேற்கொண்டு சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு சாலையை அகலப்படுத்தி பஸ் விட வேண்டுமென்று அரசு பரிசீலனையில் உள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அம்மா அவர்களுக்கு மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: சாலையை விரிவுபடுத்திய பிறகு பஸ் விடப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறி உள்ளதை, (குறுக்கீடு) பஸ் விட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், நீங்கள் திருக்குறள் சொல்லும்போது, அதற்கும் உங்கள் கேள்விக்கும் ஏதாவது தொடர்பு வைத்துக்கொண்டு திருக்குறள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்காமை, துணிவுடைமை என்று சொன்னார்கள். தூங்காமை, துணிவுடைமை இருக்கிற காரணத்தினாலேதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எந்த சக்தியாலும் அசைத்துவிட முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற இடம் 1.4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற குக்கிராமம். அந்த குக்கிராமத்திலே ஜல்லிகள் பரப்பி இருக்கிற காரணத்தாலும், பாதையை அகலப்படுத்தாத காரணத்தாலும் பேருந்துகளை இயக்க முடியவில்லை.

[1994 ஏப்ரல் 20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு ஒரு கேள்வியைக் கொண்டுவந்து, அந்தப் பாதைகளை சரி செய்த உடனேயே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைத் தொடர்ந்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்பதை நான் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *308*, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் *309*, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

309–

மதுராந்தகம் ஏரியை நவீனப்படுத்துதல்

***9282** திரு. பி. சொக்கலிங்கம்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோயில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இருப்பதால், அந்த ஏரியை நவீனப்படுத்த " குளம் அமைத்தல்" திட்டத்தின்கீழ் மதுராந்தகம் ஏரியை அரசு தேர்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏரிகாத்த ஸ்ரீராமர் கோவில் பின்னால் உள்ள மதுராந்தகம் ஏரியினை நவீனப்படுத்திட பொதுப்பணித்துறை சிறுபாசனப் பிரிவில் திட்டம் ஏதும் இல்லை.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். மறைந்த பாரதப்